# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/27 - 2025 ජූලි මස 01 වැනි අඟහරුවාදා - 2025.07.01

*2443/27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள*

எல்.டி.பி 11/80 (30) (அ)

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் கீழ், உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நளிந்த ஜயதிஸ்ஸ,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
2025, யூன் 25.

**ஒழுங்குவிதிகள்**

அவ்வப்போது திருத்தப்படும் வகையில் உள்ளவாறான, 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி 14 ஆம் திகதிய 2319/40 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதல் மற்றும் விளம்பரப்படுத்துதல்) ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது.


1A - PG 7181 — 3004 (2025/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) அதன் 2 ஆம் ஒழுங்குவிதியின் இரண்டாவது பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை சேர்ப்பதன் மூலம்:-

"ஆயின், இந்த ஒழுங்குவிதிகள் பின்வரும் விடயங்களுக்குப் பொருந்தாது.

(அ) சில்லறை விற்பனைக்காக வைத்திருக்கும் மொத்த விற்பனைப் பொதியைத் தவிர, உணவை வாங்குபவரால் கோரப்படும் உணவானது தன்மை, தரம், தோற்றம் அல்லது வர்த்தகப் பெயர் கொண்டதாகவும், மற்றும் அத்தகைய வாங்குபவரின் முன்னிலையில் எடைபோடப்பட்டதாகவும், எண்ணப்பட்டதாகவும் அல்லது அளவிடப்பட்டதாகவும் இருந்தால், விற்பனைக்கான வேறு எந்தப் பொதிகள்; மற்றும்

(ஆ) பின்வரும் கட்டாய சுட்டுத்துண்டிடுதல்(Labeling) தேவைகளைத் தவிர வணிகத்திலிருந்து வணிகத்திற்கான உணவு தயாரிப்புகள்:-

(i) பொதுப் பெயர் (மூன்று மொழிகளில் ஏதேனும் ஒன்றில்);
(ii) வணிகப் பெயர்;
(iii) நிகர உள்ளடக்கங்கள்;
(iv) உற்பத்தித் திகதி;
(v) காலாவதித் திகதி;
(vi) தொகுதி இலக்கம்;
(vii) உற்பத்தியாளர் (பெயர் மற்றும் முகவரி);
(viii) விநியோகஸ்தர்கள் (பெயர் மற்றும் முகவரி);
(ix) இறக்குமதி செய்யப்பட்ட உணவுகளின் விடயத்தில் உற்பத்தி செய்த நாடு; மற்றும்
(x) உள்ளடக்கப் பொருட்களின் (Ingredients) முழுமையான பட்டியல்

ஆயின், "சில்லறை விற்பனைக்கு இல்லை" என்ற கூற்று அத்தகைய வணிகத்திலிருந்து வணிகத்திற்கான நோக்கம் கொண்ட உணவுப் பொருட்களின் சுட்டுத்துண்டிடுதலில் குறைந்தபட்சம் 03 மில்லி மீட்டருக்கு குறையாத எழுத்துரு (Font Size) அளவில் தடித்த எழுத்துக்களில் தெளிவாகவும், துல்லியமாகவும் அச்சிடப்படுதல் வேண்டும்.

(2) அதன் 4 ஆம் ஒழுங்குவிதியில் –

(அ) அதன் (1) ஆம் உப ஒழுங்குவிதியில்-

(i) அதன் பந்தி (அ) ஐ நீக்கி, அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"(அ) பிரதான முகப்பில் (Main panel) மூன்று மொழிகளிலும் அல்லது பிரதான முகப்பில் மூன்று மொழிகளில் ஏதேனும் இரண்டு மொழிகளிலும் வேறு ஏதேனும் முகப்பில் மற்றுமொரு மொழியிலும் தடித்த எழுத்தில் உற்பத்திப் பொருளின் பொதுப் பெயர்;";

(ii) அதன் பந்தி (ஆ) ஐ நீக்கி, அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"(ஆ) எந்தவொரு நபரையும் ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ கூடாதவாறு மூன்று மொழிகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில், வணிகப் பெயர் அல்லது வர்த்தக பெயர் (ஏதேனும் இருந்தால்); மற்றும்";

(ஆ) அதன் (2) (அ) உப ஒழுங்குவிதியில்-

(i) அதன் உப ஒழுங்குவிதி (i) இன் உப பந்தியின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம்: -

ஆயினும், அத்தகைய விலக்களிப்பு பின்வரும் உருப்படிகளுக்குப் பொருந்தாது:-

அ) பசையம் (Gluten) கொண்ட தானிய வகைகள்; அதாவது, கோதுமை, கம்பு, பார்லி, ஓட்ஸ் போன்ற தானியங்கள் அல்லது அவற்றின் கலப்பினங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புகள்;

ஆ) ஓட்டுமீன்கள் (Crustacea) மற்றும் அவற்றின் தயாரிப்புகள்;

இ) முட்டைகள் மற்றும் முட்டை தயாரிப்புப் பொருட்கள்;

ஈ) மீன் மற்றும் மீன் தயாரிப்புப் பொருட்கள்;

உ) வேர்க்கடலை, சோயாபீன்ஸ் மற்றும் அவற்றின் தயாரிப்புப் பொருட்கள்;

ஊ) பால் மற்றும் பால் பொருட்கள் (லக்ற்ரோஸ் (lactose) உள்ளடங்களாக);

எ) தாவரக் கொட்டைகள்,விதைகள் மற்றும் அவற்றின் உற்பத்திப் பொருட்கள்.

(இ) அதன் பந்தி (அ) இன் உப பந்தி (V) ஐ நீக்குவதன் மூலம் ;

(ஈ) அதன் பந்தி (அ) இன் உப பந்தி (viii) இல், "1.5 மில்லிமீற்றருக்குக் குறையாத" என்ற சொற்களுக்குப் பதிலாக "1 மில்லிமீற்றருக்குக் குறையாத" என்ற சொற்களை சேர்ப்பதன் மூலம்;

(3) அதன் ஒழுங்குவிதி 5 இல், பந்தி (உ) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலமும்: -

"(உ) ஒழுங்குவிதி (4)(1) வெளிப்படுத்துகைகளைத் தவிர, ஏனைய வெளிப்படுத்துகை களில் உற்பத்தி தேதி, காலாவதி திகதி மற்றும் ஊட்டச்சத்து சுட்டுத்துண்டிடுதல் ஆகியவை 1.5 மி.மீ. உயரத்திற்குக் குறையாத எழுத்துக்களில் தெளிவாக அச்சிடப்பட வேண்டும்.".

(4) அதன் ஒழுங்குவிதி 8 இல் -

(அ) அதன் உப ஒழுங்குவிதி (1) இல், "X சுவையூட்டப்பட்ட" என்ற வார்த்தைகளுக்கு பதிலாக "இயற்கை/செயற்கையாக X சுவையூட்டப்பட்ட" என்ற வார்த்தைகளை சேர்ப்பதன் மூலமும்; மற்றும்

(ஆ) அதன் உப ஒழுங்குவிதி (2) இல், " சுட்டுத்துண்டிடுதலின் மீது அறிவிக்கப்பட வேண்டும்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக " சுட்டுத்துண்டிடுதலில் உள்ளடக்கப் பொருட்களின் பட்டியலில் அறிவிக்கப்பட வேண்டும்" என்ற வார்த்தைகளை சேர்ப்பதன் மூலமும்;

(5) அதன் ஒழுங்குவிதி 9 இல்-

(அ) அதன் உப ஒழுங்குவிதி (3) இல், அதன் பந்தி (ஆ) ஐ நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்: -

"(ஆ) ஒத்த அல்லது மூல(original) உற்பத்திப் பொருள் ஒன்றுடன் ஒப்பிடும்போது குறைந்தது முப்பது சதவீத(30%) சக்தி குறைப்பு இருக்குமிடத்து, சீனிக்குப் பதிலாக பகுதியளவில் இனிப்பூட்டிகள் பயன்படுத்தலாம் என்பதுடன் சுட்டுத்துண்டில் "சக்தி குறைக்கப்பட்டது" என்ற வெளிப்படுத்துகை ஒன்று வெளியிடப்படலாம்,";

(ஆ) அதன் உப ஒழுங்குவிதி (5) இற்குப் பின்னர், உடனடுத்து பின்வரும் விதிமுறையைச் சேர்ப்பதன் மூலம்: -

" ஆயின், பால் சம்பந்தப்பட்ட தயாரிப்புப் பொருட்கள், தேன், தேன் மெழுகு (bee wax), சேர்க்கப்பட்ட நுண்ணூட்டச்சத்து கூறுகள், உணவுச்சேர்மானப் பொருட்கள் மற்றும் பதப்படுத்தும் துணைப் பொருட்கள் என்பவை இந்தத் தேவைப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன."

(6) அதன் ஒழுங்குவிதி 12 இல்-

(அ) அதன் உப ஒழுங்குவிதி (5) இல்-

(i) அதன் பந்தி (இ) க்குப் பின்னர், உடனடுத்து பின்வரும் விதிமுறையைச் சேர்ப்பதன் மூலம்: -

"ஆயின், ஒரு தயாரிப்பானது கைக்குழந்தைகள் அல்லது இளம் சிறார்கள் அல்லது கர்ப்பிணிகள் அல்லது பாலூட்டும் தாய்மார்களுக்காக விஷேடமாகத் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டால், அத்தகைய

குழுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட தரநிலை இல்லாத நிலையில், இங்கே அட்டவணை IX இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிய சராசரித் தேவை மதிப்புகள்(AR) அல்லது போதுமான உட்கொள்ளல் மதிப்புகள்(AI) என்பன சுட்டுத்துண்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் ஏற்றுக்கொள்ளப்படலாம்."; மற்றும்

(ii) அதன் பந்தி (ஈ) ஐ நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் உப ஒழுங்குவிதி (8) இன் பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள, "குளிர்வித்தல் அல்லது உறைவித்தல்(freezing); மற்றும்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "ஈரப்பதத்தைத் தவிர மூலக்(original) கலவையில் குறிப்பிடத்தக்க மாற்றமின்றி குளிர்வித்தல் அல்லது உறைவித்தல் அல்லது உலர்த்துதல்; " என்ற வார்த்தைகளை சேர்ப்பதன் மூலம்; மற்றும்"

(இ) அதன் உப ஒழுங்குவிதி (10) இல்-

(i) அதன் பந்தி (அ) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"(அ) (i) எந்தவொரு உணவு தொடர்பான சுட்டுத்துண்டும் அல்லது விளம்பரமும், அந்த உணவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊட்டச்சத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தாலேயொழிய, அது பொதுவாக அந்த உணவில் இருந்ததா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், அது ஒரு செறிவூட்டப்பட்ட உணவு என்று குறிப்பிடக்கூடாது. ஆயின், அத்தகைய சேர்த்தலுக்கான நோக்கம் மக்கள்தொகையில் அத்தகைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊட்டச்சத்துக்களின் நிரூபணமான குறைபாட்டைத் தடுப்பது அல்லது சரிசெய்வதாகும்; மற்றும்

(ii) ஒரு ஊட்டச்சத்தின் செறிவூட்டல் அளவு, இங்குள்ள அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஊட்டச்சத்து குறிப்பு மதிப்பு (NRV) அல்லது இங்குள்ள அட்டவணை IX இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சராசரி தேவை மதிப்புகள் (AR) அல்லது போதுமான உட்கொள்ளல் மதிப்புகள் (AI) என்பவற்றின் மூன்றில் ஒரு பங்கை (1/3) தாண்டினால், அத்தகைய பொருட்களை சந்தைப்படுத்தப்படுவதற்கு முன்னர், பிரதம உணவு அதிகாரியிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதி பெறப்பட வேண்டும்;"; மற்றும்

(ii) அதன் பந்தி (ஈ) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"(ஈ) பதப்படுத்தப்பட்ட பின்னர், முன் பதப்படுத்தும் மட்டத்தில் ஊட்டச்சத்தை பராமரிக்க சேர்க்கப்பட வேண்டிய ஊட்டச்சத்து இருந்தால் அல்லது உணவில் சேர்க்கப்பட வேண்டிய ஊட்டச்சத்து, இங்கே அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊட்டச்சத்து குறிப்பு மதிப்புகள்(NRV) அல்லது அட்டவணை IX இல் குறிப்பிடப் பட்டுள்ளபடி சராசரி தேவை மதிப்புகள்(AR) அல்லது போதுமான உட்கொள்ளல் மதிப்புகள்(AI) என்பவற்றில் மூன்றில் ஒரு பங்கை (1/3) தாண்டவில்லை என்றால், பிரதம உணவு அதிகாரியின் முன் எழுத்துபூர்வ ஒப்புதல் தேவையில்லை;";

(7) அதன் ஒழுங்குவிதி 13 இன் உப ஒழுங்குவிதிகள் (1), (2), (3), (4), (5), (6), (7), (8), (9),(10), (11), (12), (13) மற்றும் (15) ஆகியவற்றை நீக்குவதன் மூலம்;

(8) அதன் ஒழுங்குவிதி 14 இல்-

(அ) "உயிரியல் ரீதியாகச் செயல்படும் கூறுகள்"(bioactive components), என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்திற்குப் பின்னர் உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலம்: -

"வணிகத்திலிருந்து வணிகத்திற்கான உணவுத் தயாரிப்புப் பொருட்கள்" என்பது உணவுத் தயாரிப்புப் பொருட்களைக் குறிக்கிறது. அவையாவன-

(அ) நுகர்வோருக்கு நேரடி விற்பனைக்காக வழங்கப்படாதது; மற்றும்

(ஆ) மேலதிக உணவு பதப்படுத்துதல் அல்லது தயாரிப்பதற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுவது;

(ஆ) "பொதுப் பெயர்" என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்திற்குப் பின்னர் உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைக் சேர்ப்பதன் மூலம்: -

"குடிசைத் கைத்தொழில்" என்பது ஒரு வீட்டிற்குள் மேற்கொள்ளப்படும் ஒரு சிறிய அளவிலான உற்பத்தி தொழிலைக் குறிக்கிறது;";

(இ) "பிரதான முகப்பு" என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்திற்குப் பின்னர் உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைக் சேர்ப்பதன் மூலம்: -

"பால் சார்ந்த தயாரிப்பு" என்பது பாலில் இருந்து பிரத்தியேகமாக பெறப்பட்ட தயாரிப்புகளைக் குறிக்கிறது, அதில் அதன் உற்பத்திக்குத் தேவையான பிற பொருட்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம். மேலும் அதில் பாலின் நிறை அடிப்படையில் எண்பது சதவீதத்திற்கும் (80% m/m) குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் இது மொத்த கொழுப்பின் நிறை அடிப்படையில் 2.8 சதவீதத்திற்கும்(2.8% m/m) குறையாமலும் இருத்தல் வேண்டும்.

ஆயின், சேர்க்கப்படும் அத்தகைய பொருட்கள் எந்தவொரு பால் உட்பொருட்களையும் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மாற்றாது. மேலும் இளம் சிறார்களுக்காக வடிவமைக்கப்பட்ட பால் சார்ந்த பொருட்கள் பால் கூறுகளின் நிறை அடிப்படையில் தொண்ணூறு சதவீதத்திற்கும்(90% m/m) குறையாமல் இருத்தல் வேண்டும்;";

மேலும் 14 ஆம் ஒழுங்குவிதியில் "விளம்பரம்" என்பது சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தை கொண்டிருத்தல் வேண்டும்"" என்பதற்குப் பதிலாக "விளம்பரம்" என்பது சட்டத்தில் உள்ளவாறான விளம்பரம் என்பதற்கான அதே கருத்தை கொண்டிருத்தல் வேண்டும்" என்பதை இடுதல் வேண்டும்.

(9) அதன் அட்டவணை IV இல்-

(அ) அதன் உப பந்தி 1.1.3 க்குப் பின்னர் உடனடுத்து பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம்: -

“எவ்வாறாயினும் பந்தி 1.1 இன் விதிகள் எது எவ்வாறு இருந்தபோதிலும், பின்வரும் உணவுகள் கட்டாய ஊட்டச்சத்து வெளிப்படுத்துகைத் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன:

- கோதுமை, அரிசி, தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் அல்லது ஒரு மூலப்பொருளை உள்ளடக்கிய உற்பத்திப் பொருட்கள் போன்ற மூல விவசாய உற்பத்திப்பொருட்கள் உள்ளடங்களான ஒற்றை மூலப்பொருளைக் கொண்ட பதப்படுத்தப்படாத உற்பத்திப் பொருட்கள்;

- போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதி செய்யப்பட்ட குடிநீர்;

- மசாலா அல்லது அதன் கலவைகள்;

- உப்பு;

- மேசை மீது வைக்கப்படும் இனிப்பூட்டிகள்(Tabletop sweeteners);

- கோப்பிச் சாறுகள், முழு அல்லது அரைக்கப்பட்ட கோப்பிக் கொட்டைகள் மற்றும் முழு அல்லது அரைக்கப்பட்ட காஃபின் நீக்கப்பட்ட(decaffeinated) கோப்பிக் கொட்டைகள், கோப்பி, காஃபின் நீக்கப்பட்ட கோப்பி வேறு எந்த உள்ளடக்கப்பட்ட பொருட்களும் சேர்க்கப்படாத உடனடியாக கரையக்கூடிய கோப்பி தூள்;

- தேயிலை, காஃபின் நீக்கப்பட்ட தேயிலை, உடனடி அல்லது கரையக்கூடிய தேயிலை அல்லது தேயிலைச் சாறு (tea extract), காஃபின் நீக்கப்பட்ட உடனடி அல்லது கரையக்கூடிய தேயிலை அல்லது தேயிலையின் ஊட்டச்சத்து மதிப்பை மாற்றியமைக்காத சுவையூட்டிகளைத் தவிர வேறு எந்த சேர்க்கப்பட்ட உள்ளடக்கப் பொருட்களைக் கொண்டிராத தேயிலைச் சாறுகள்

- வேறு எந்த சேர்க்கைப் பொருட்களையும் கொண்டிராத இயற்கை மற்றும் செயற்கை வினாகிரி;

- சுவையூட்டிகள்;

- உணவு சேர்க்கைகள்;

- செயலாக்க உதவிகள் / பதப்படுத்தல் பொருட்கள்;
- உணவு நொதியங்கள்( Food enzyme);
- ஜெலட்டின்;
- ஈஸ்ட்;
- 100 செ.மீ க்குச் சமமான அல்லது அதற்குக் குறைவான மொத்த மேற்பரப்பளவு கொண்ட பொட்டலங்களில் உள்ள உணவு அல்லது கொள்கலன்களில் உள்ள உணவு; மற்றும்
- குடிசைக் கைத்தொழில் மூலம் தயாரிக்கும் உணவுப் பொருட்கள்";

(ஆ) அதன் பந்தி 1.2 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"1.2 உப பந்திகள் 1.1.1, 1.1.2 மற்றும் 1.1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள உணவுகளைத் தவிர மற்றைய அனைத்து உணவுப் பொருட்களுக்குமான ஊட்டச்சத்து வெளிப்படுத்துகை தன்னார்வமாக செய்யப்படும். இந்த விதிமுறைகள் நடைறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு வருட காலம் முடிவடைந்த பின்னர், மற்றைய அனைத்து உணவுப் பொருட்களுக்கும் இது கட்டாயமானதாகும்.";

(இ) அதன் உப பந்தி 2.1.4 ஐ நீக்குவதன் மூலம்;

(ஈ) அதன் உப பந்தி 2.3.2 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"2.3.2 ஊட்டச்சத்து வெளிப்படுத்துகையைப் பயன்படுத்தும்போது, நூறு கிராம்(100g) அல்லது நூறு மில்லிலீட்டர் (100ml) அல்லது சுட்டுத்துண்டில் அளவு ரீதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி இங்கே அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்து குறிப்பு மதிப்பில் (NRV) அல்லது இங்கே அட்டவணை IX இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சராசரி தேவை மதிப்புகள் (AR) அல்லது போதுமான உட்கொள்ளல் மதிப்புகளில் (AI) ஐந்து சதவீதத்திற்கும் (5%) குறைவான அளவுகளில் இருக்கும் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் வெளிப்படுத்தப்படக்கூடாது.

(உ) அதன் பந்தி 4.4 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம்: -

"4.4. "4.4. வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் பற்றிய எண்ணியல் தகவல்கள், நூறு கிராமுக்கு (100g) அல்லது நூறு மில்லிலிட்டருக்கு (100ml) அல்லது பொதியில் ஒரு தனியான பகுதி மாத்திரமே கொண்டிருந்தால் ஒரு பொதிக்கு மெட்ரிக் அலகுகளில் அல்லது இங்கே அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஊட்டச்சத்து குறிப்பு மதிப்பின் சதவீதமாக அல்லது அட்டவணை IX இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சராசரி தேவை மதிப்புகள் (AR) அல்லது போதுமான குறியீட்டு மதிப்பின்(AI) சதவீதமாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், இந்தத் தகவல் சுட்டுத் துண்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அல்லது பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தால் ஒவ்வொரு பகுதிக்கும் வழங்கப்படும். மேலும், புரதம் மற்றும் மேலதிக ஊட்டச்சத்துக்கள் பற்றிய தகவல்கள், NRV நிறுவப்பட்ட ஊட்டச்சத்து குறிப்பு மதிப்பின் சதவீதங்களாகவோ அல்லது இங்கே அட்டவணை V இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பு உட்கொள்ளலாகவோ அல்லது அட்டவணை IX இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சராசரி தேவை மதிப்புகள் (AR) அல்லது போதுமான உட்கொள்ளல் மதிப்புகளாகவோ (AI) வெளிப்படுத்தப்படலாம்.

(ஊ) அதன் பந்தி 6 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் முகப்பைச் சேர்ப்பதன் மூலம்: -

6. உற்பத்திப்பொருள் சுட்டுத் துண்டில் காட்சிப்படுத்துவதற்கான ஊட்டச்சத்து தகவல் முகப்புக்கான வடிவமைப்பு

| *வழக்கமான மதிப்புகள்* | *100g இற்கு (திடப்பொருளாக இருந்தால்)<br>100ml இற்கு(திரவப்பொருளாக இருந்தால்)* | *ஒரு பரிமாறலுக்கு* |
|---|---|---|
| சக்தி | kJ | kJ |
| | kcal | kcal |
| காபோஹைட்ரேட்டுகள் | g | g |
| உணவு நார்ச்சத்து | g | g |
| மொத்த சீனி | g | g |
| புரதம் | g | g |
| மொத்த கொழுப்பு | g | g |
| நிறைவுற்ற (Saturated) கொழுப்பு அமிலங்கள் | g | g |
| டிரான்ஸ்-கொழுப்பு அமிலங்கள் (Trans-fatty acids) | g | g |
| சோடியம் (Na) | mg | mg |

ஒரு பரிமாறலுக்கான அளவு …… கிராம் அல்லது மிலி.

ஒரு பொதிக்கு வழங்கப்படும் சேவைகளின் எண்ணிக்கை ..................

(10) அதன் அட்டவணை V இல்-

(அ) "ஒழுங்குவிதிகள் 12(5)(அ), 12(6)(ஆ)(இ), 12(10)(ஈ)" என்ற வார்த்தைகளை நீக்கிவிட்டு, அவற்றின் இடத்தில் " ஒழுங்குவிதிகள் 12(5)(அ), 12(6)(ஆ) மற்றும் (இ), 12(10)(அ)(ii), 12(10)(ஈ)" என்ற வார்த்தைகளை சேர்ப்பதன் மூலம்:

(ஆ) "***DFE-உணவு ஃபோலேட் சமமானவை" (“***DFE-dietary folate equivalents”) என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம்: -

“***DFE-உணவு ஃபோலேட் சமமானவை

சக்தி, காபோஹைட்ரேட், மொத்த சீனி மற்றும் கொழுப்பு (வயது வந்தோருக்காக) ஆகியவற்றிற்கான குறிப்பு உட்கொள்ளல்கள்

சக்தி: 2000 கிலோகலோரி (kcal)

காரபோஹைட்ரேட்: 275g

மொத்த சீனி: 30 g

கொழுப்பு: 67g”.

(11) அதன் அட்டவணை VII இல், "கூறு" என்ற தலைப்பின் கீழ் "கொழுப்பு" என்ற விடயத்தையும் மற்றும் "உரிமைகோரல்" மற்றும் "நிபந்தனைகள்" என்ற தலைப்புகளின் கீழ் அதனுடன் தொடர்புடைய உள்ளீடுகளையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களை மற்றும் உள்ளீடுகளை சேர்ப்பதன் மூலமும்:

| கூறு | உரிமைகோரிக்கை | நிபந்தனைகள் |
|---|---|---|
| “கொழுப்பு | குறைந்த அளவு | 100 g க்கு 3g ஐ விட மிகாமல் (திடப்பொருள்கள்), 100ml க்கு 1.5g ஐ விட மிகாமல் (திரவங்கள்) |
| | அற்ற | 100g(திடப்பொருள்கள்)** அல்லது 100ml (திரவங்கள்) *** என்பவற்றுக்கு 0.5g ஐ விட மிகாமல்”. |

(12) அதன் அட்டவணை IX ஐ நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம்: -

"அட்டவணை IX

ஒழுங்குவிதிகள் 12(5)(இ), 12 (10)(அ)(ii) மற்றும் 12(10)(ஈ)

## அட்டவணை A

சக்தி, புரதம், வைட்டமின்கள் மற்றும் கனிமங்களுக்கான தினசரி சராசரி தேவை மதிப்பு (AR)

| வாழ்க்கைப் பருவங்கள் | வயது | பால் | செயற்பாட்டு நிலை | சராசரி எடை (Kg) | சக்தி Kcal) | புரதம் (g) | வைட்டமின் A µg RAE | வைட்டமின் C mg | தயமின் (Thiamine) mg | நியசின் (Niacin) mg | ரைபோஃப்ளேவின் (Riboflavin) mg | வைட்டமின் B6 mg | ஃபோலேட் µg DFE | கல்சியம் mg | இரும்பு mg | துத்தநாகம் mg |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கைக்குழந்தைகள் | 0-6 மாதம் | ஆ/பெ | | 6.1 | 530 | 7 | NA | NA | NA | NA | NA | NA | NA | NA | NA | NA |
| | 7-12 மாதம் | ஆ/பெ | | 8.6 | 660 | 10 | 190 | NA | 0.3 | 3.6 | 0.4 | 0.3 | 80 | 280 | 8 | 2.4 |
| சிறிய குழந்தைகள் | 1-3 வருடம் | ஆ/பெ | | 11.9 | 990 | 9 | 205 | 15 | 0.4 | 5.4 | 0.5 | 0.5 | 90 | 390 | 6 | 3.6 |
| கர்ப்பிணி தாய்மார்கள் | 1 வது மூன்று மாதங்கள் | பெ | குறைந்த செயற்பாட்டு நிலை | 69.0 | 1960 | 38 | 540 | 90 | 0.8 | 10.8 | 1.5 | 1.5 | 600 | 750 | 21 | 10.2 |
| | 2 வது மூன்று மாதங்கள் | பெ | குறைந்த செயற்பாட்டு நிலை | | 2150 | 45 | 540 | 110 | 0.9 | 11.8 | 1.5 | 1.5 | 600 | 750 | 21 | 10.2 |
| | 3 வது மூன்று மாதங்கள் | பெ | குறைந்த செயற்பாட்டு நிலை | | 2390 | 61 | 540 | 110 | 1.0 | 13.1 | 1.5 | 1.5 | 600 | 750 | 21 | 10.2 |
| பாலூட்டும் தாய்மார்கள் | 0−6மாதங்கள் மகப் பேற்றுக்கு பின் | பெ | குறைந்த செயற்பாட்டு நிலை | | 2390 | 53 | 1020 | 140 | 1.0 | 13.1 | 1.7 | 1.4 | 380 | 750 | 16 | 11.3 |

பால்; ஆ: ஆண் ; பெ: பெண்
NA - பொருத்தமில்லை RAE - ரெடினோல் செயற்பாட்டுச் சமநிலை

## அட்டவணை B

வைட்டமின்களுக்கான போதுமான உட்கொள்ளல் மதிப்பு (AI) (நாளொன்றுக்கு)

| வாழ்க்கைப் பருவங்கள் | வயது | பால் | பௌதீக செயற்பாட்டு நிலை (PAL Physiical Activity level) | வைட்டமின் D µg | α-டோகோபெரோலாக வைட்டமின்E mg | வைட்டமின் B12 µg | வைட்டமின் K µg | பாந்தோதெனிக் அமிலம் mg | பயோட்டின் mg | கோலின் mg |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கைக்குழந்தைகள் | 0-6 மாதம் | ஆ/பெ | அனைத்து | | | | | | | |
| | 7-12 மாதம் | ஆ/பெ | அனைத்து | 10 | 5 | 1.5 | 10 | 3.0 | 6 | 160 |
| சிறிய குழந்தைகள் | 1-3 வருடம் | ஆ/பெ | அனைத்து | 15 | 6 | 1.5 | 12 | 4.0 | 20 | 140 |
| கர்ப்பிணி தாய்மார்கள் | அனைத்து மூன்றுமாதங்களும் | பெ | அனைத்து | 15 | 11 | 4.5 | 70 | 5.0 | 40 | 480 |
| பாலூட்டும் தாய்மார்கள் | 0−6மாதங்கள் மகப்பேற்றுக்கு பின் | பெ | அனைத்து | 15 | 11 | 5.0 | 70 | 7.0 | 45 | 520 |

பால்; ஆ: ஆண் ; பெ: பெண்

அட்டவணை C

கனிமங்களுக்கான போதுமான உட்கொள்ளல் மதிப்பு (AI) (நாளொன்றுக்கு)

| வாழ்க்கைப் பருவங்கள் | வயது | பால் | பௌதீக செயற்பாட்டு நிலை (PAL Physiical Activity level) | குளோரைட்டு mg | தாமிரம் mg | புளோரைட்டு mg | மக்னீசியம் mg | மங்கனீசு mg | பொஸ்பரஸ் mg | பொட்டாசியம் mg | செலெனியம் µg | மொலிப்டினம் µg | அயடின் µg | சோடியம் g |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கைக் குழந்தைகள் | 0-6 மாதம் | ஆ/பெ | அனைத்து | | | | | | | | | | | |
| | 7-12 மாதம் | ஆ/பெ | அனைத்து | 0.3 | 0.4 | 0.4 | 80 | 0.02-0.5 | 160 | 750 | 15 | 10 | 70 | 0.2 |
| சிறிய குழந்தைகள் | 1-3 வருடம் | ஆ/பெ | அனைத்து | 1.7 | 0.7 | 0.6 | 170 | 0.5 | 250 | 800 | 15 | 15 | 90 | 1.1 |
| கர்ப்பிணித் தாய் மார்கள் | அனைத்து மூன்று மாதங்களும் | பெ | அனைத்து | 3.1 | 1.5 | 2.9 | 300 | 3.0 | 550 | 3500 | 70 | 65 | 200 | 2.0 |
| பாலூட்டும் தாய் மார்கள் | 0–6 மாதங்கள் மகப்பேற்றுக்கு பின் | பெ | அனைத்து | 3.1 | 1.5 | 2.9 | 300 | 3.0 | 550 | 4000 | 85 | 65 | 200 | 2.0 |

பால்; ஆ: ஆண் ; பெ: பெண்

EOG 07 - 0012